**கம்பளை நகர சபை**
**கண்டி மாவட்டம்**

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 26 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 19 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 28 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

இவ் அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக் கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக் கூற்றுக்களில் காசு மீதி ரூபா 7,159,980 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2007 ஆண்டு அக்டோபர் 30 திகதி நிலையற்ற கட்டளையின் மீது செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,659,600 இற்கான தொகையினை கணக்கீடு செய்யப்படாமல் வங்கி இணக்கக் கூற்றில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காசு மீதி அதே தொகையால் மிகையாகவும், கடன்கொடுத்தோர் அதே தொகையால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2004 ஆண்டு முதல் 2014 திசெம்பர் 31 திகதி வரை 44 சந்தர்ப்பங்களில் மதிப்பளிக்கப்படாத ரூபா 1,033,223 பெறுமதியான காசோலைகள் கணக்கீடு செய்யப்படாமல் வங்கி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருந்தமையால் காசு மீதி அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

02 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24,425,052 ஆகக் காணப்பட்டதுடன் பட்டோலைகளின் பிரகாரம் அக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 22,461,191 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 1,963,861 இற்கான இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 21,293,768 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் ஒரு வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,600,995 தொகையாகும்.

1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 06 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 19,087,098 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 13,638,838 ஒரு வருட காலத்தை மிகைத்திருந்த மீதிகளின் பெறுமதி ஆகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

2004 முதல் 2007 வரை 04 சந்தர்ப்பங்களில் பொதுக் கணக்கில் இருந்து வேறு கணக்குகளுக்கு மாற்றப்படல் என வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 4,094,400 இற்கான தொகை மற்றும் செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 543,545 தொகை தொடர்பாக சாட்சிகள் ஏதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், அத் தொகையினை வங்கி இணக்கக் கூற்றில் சீராக்கல்கள் என காட்டப்பட்டிருக்கவில்லை.

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் தாபனக் கோவை | |
| பிரிவுகள் 14.10 மற்றும் 14.11 | இறந்துள்ள/ ஓய்வுபெற்றுள்ள மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 04 அலுவலர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 179,280 இடர்கடன் மற்றும் விழா முற்பணத்தினை அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| i. நிதிப் பிரமாணங்கள் 371 | 03 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 38,000 இற்கான முற்பணத்தினை தீர்த்திருக்கவில்லை. |
| ii. நிதிப் பிரமாணங்கள் 571 | 185 சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்திருந்த ரூபா 2,003,375 இற்கான காலங் கடந்த வைப்புக்களை ஆதனவழிப்புச் செய்திருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 34,563,421 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 19,207,539 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 15,355,882 இற்கான முன்னேற்றம் ஒன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான சம்பள மீளளிப்புத் தொகையாக ரூபா 67,763,280 தொகையொன்று கிடைத்திருந்த போதிலும், சம்பளங்கள் மற்றும் படிகள் என ரூபா 75,672,304 தொகை செலுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சபை வருமானத்தில் இருந்து ரூபா 7,909,024 இற்கான தொகையொன்று சபை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக செலவிடப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டதுடன், அத் தொகை சம்பள மீளளிப்பு தவிர சபையின் மீண்டுவரும் வருமானத்தில் நூற்றிற்கு 11 இனை கொண்டிருந்தது.

2.3 வருமான நிருவாகம்

2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

(அ) மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினனால் மீளாய்வாண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை | ஆண்டின் போது சிட்டை இடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை மீதியில் அறவிடப் படாத தொகை | 2014 சிட்டை இடப்பட்ட வருமானத்தில் அறவிடப் படாத தொகை | அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 2014.01.01 திகதி உள்ளவாறு நிலுவையில் இருந்து சேகரித்த வருமானம் | 2014 ஆண்டின் போது சிட்டையிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | | | |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீத வரி மற்றும் வரி | 35,703,701 | 31,329,843 | 10,971,054 | 15,549,129 | 24,732,647 | 15,780,714 | 40,513,361 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | - | 2,455,326 | - | 2,455,326 | - | - | - |
| வாடகை (கடை மற்றும் வீடு) | 8,163,271 | 7,954,456 | 1,468,058 | 5,756,173 | 6,695,213 | 2,198,283 | 8,893,496 |
| ஏனையவை (சபையின் காணி குத்தகை) | 497,699 | 377,946 | 271,668 | 227,521 | 226,031 | 150,425 | 376,456 |

2014 திசெம்பர் 31 திகதி வரை கூட்டுத்தொகை ரூபா 49,783,313 இற்கான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது.

2.3.2 வீத வரி

(i) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் இருந்தவாறு ரூபா 35,703,701 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டதுடன், ஆண்டின் போது சிட்டை இடப்பட்டவை ரூபா 31,329,843 ஆகும். அவற்றில் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட சதவீதம் நூற்றிற்கு 50 ஆகக் காணப்பட்டமையால் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 40,513,361 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது.

(ii) நிலுவை வீத வரி அறவீடு செய்வதற்காக நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் ரூபா 10,000 இனை மிகைத்த நிலுவை ஆதனங்கள் 797 என வெளிப்படுத்தப்பட்டது.

2.3.3 வாடகை

------------------

(i) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 8,893,496 இற்கான அறவிடப்பட வேண்டிய கடை மற்றும் வீட்டு வாடகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2000 ஆண்டின் போது தி.மு. ஜயரத்ன மாவத்தையில் புகையிரத் திணைக்களத்திற்கு சொந்தமான காணியொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வர்த்தக தொடர்கட்டிடத் தொகுயில் 209 கடைகளில் இருந்து உடன்படிக்கையின் பிரகாரம் வாடகை அறவிடப்படாமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 6,671,250 இற்கான வாடகை ஒன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் தரை வாடகையாக புகையிரத் திணைக்கத்திற்கு ரூபா 3,627,234 தொகையொன்று செலுத்த வேண்டியிருந்தது.

(iii) 1980 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 1980/46 கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்று நிருப ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான கடைகளுக்காக 05 வருடங்களுக்கு ஒரு முறை வாடகை, பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை.

2.3.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 928,358 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 4,000,000 வும் கிடைக்க வேண்டியிருந்தது.

2.3.5 ஏனைய வருமானங்கள்

-------------------------------------

(அ) மலசல கூடக் கட்டணம்

-----------------------------------------

2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை பொது மலசல கூடக் கட்டணம் ரூபா 387,759 தொகையும் மீளாய்வாண்டிற்கான கட்டணம் ரூபா 904,407 தொகையும் ஆக மொத்தம் ரூபா 1,292,166 தொகையில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர மண்டபம் வாடகை வருமானம்

-------------------------------------------------------------

சபையினால் எடுக்கப்பட்டிருந்த தீர்மானங்களுக்கு மாற்றமாக நகர சபை மண்டபத்தை வாடகைக்குக் கொடுத்தல் காரணமாக ஆண்டின் போது ரூபா 154,000 இற்கான வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

2.3.6 விளம்பர அறிவித்தல் பலகைக் கட்டணம்

-----------------------------------------------------------------------

விளம்பர அறிவித்தல் பலகைகள் தொடர்பாக முறையான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் கணக்காய்வு தெரிவு பரிசோதனையின் பிரகாரம் சபை தற்போது அறவீடு செய்யும் அடிப்படையாக ரூபா 342,050 இற்கான கட்டணம் ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 மனித வள முகாமைத்துவம்

----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ஆரம்ப தர ஊழியர் வெற்றிடங்கள் 20 காணப்பட்டதுடன் அதற்கான 79 அமைய ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தி சபை நிதியத்தில் இருந்து ரூபா 11,296,710 தொகை ஒன்று சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது.

(ஆ) வெற்றிடமாகியுள்ள எண்ணிக்கையை விடக் கூடுதலாக அமைய ஊழியர்கள் ஈடுபடுத்தியிருந்த போதிலும் ஆண்டின் போது ரூபா 2,774,953 தொகையொன்று மேலதிக நேரச் சம்பளமாக செலவிடப்பட்டிருந்தது.

3.2 அங்கீகாரம் அற்ற நிர்மாண வேலைகள்

-------------------------------------------------------------------

அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக சபையில் பேணப்பட்டிருந்த பதிவேட்டின் பிரகாரம் 2014 ஆண்டின் போது 99 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் பதியப்பட்டிருந்தது. இந்த நிர்மாண வேலைகள் மீது பரிசோதனை மேற்கொண்டு அனைவருக்கும் அறிவித்தல் அனுப்பியிருந்த போதிலும் 07 சந்தர்ப்பங்கள் தவிர மீதியான நிர்மாண வேலைகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை.

3.3 கருத்து முரண்பாட்டு தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------------------------------------------

சபை ஊழியர்கள் அல்லாத நபர் ஒருவர் வதியும் சபைக்குச் சொந்தமான ஆதனம் ஒன்றில் அமைந்துள்ள வீடொன்றினை திருத்துவதற்காக ரூபா 215,000 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. இது தவிர மின்சாரத்திற்காக ரூபா 5,280 மற்றும் நீர் விலைப்பட்டிக்காக ரூபா 1,554 தொகையும் சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

3.4 பயன்படுத்தப்படாத/ குறை பயன்பாட்டு சொத்துக்கள்

--------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 630,220 பெறுமதி 03 சொத்து விடயங்கள் 3-6 வருடங்கள் இடைப்பட்ட காலப்பகுதி முதல் பயன்படுத்தப்படாது மற்றும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டதுடன் அவதானிக்கப்பட்டது.

3.5 சுற்றாடல் அனுமதிப்பத்திரம்

---------------------------------------------

1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டத்தின் பிரிவு 23(அ) இன் கீழ் 2008 ஜனவரி 25 திகதிய மற்றும் 1533/16 இலக்க சுற்றாடல் சார் இயற்கை வளங்கள் அமைச்சரினால் வெளியிடப்பட்டிருந்த அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய வர்த்தக நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கியிருக்கவில்லை.

3.6 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

----------------------------------------------------------------------

(i) குப்பைகள் முகாமைப்படுத்தாமல், மண் போடப்பட்டு மூடப்படல் மேற்கொள்ளப்படுவதுடன் பெக்கோ இயந்திரத்திற்கு மாத்திரம் வாடகையாக 2014 ஆண்டின் போது ரூபா 831,938 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) தேசிய திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தின் உதவியின் கீழ் 2012 ஆண்டின் போது கம்பளை பொதுச் சந்தை வளவில் மற்றும் வைத்தியசாலை வளவில் ரூபா 1,107,514 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 02 உயிரியல் வாயு அலகுகள் மீளாய்வாண்டு இறுதி அளவில் செயற்படாது காணப்பட்டது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------------------

4.1 பெறுகைகள் திட்டம்

------------------------------

மீளாய்வாண்டிற்கான சபை பெறுகைகள் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிராகரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணைக்கஞ் செய்யும் போது 06 வருமான விடயங்களில் நூற்றிற்கு 15 முதல் நூற்றிற்கு 657 வரையும், 08 செலவு

விடயங்களில் நூற்றிற்கு 14 முதல் நூற்றிற்கு 85 இனை மிகைத்தும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

சபை மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

4.4 அகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 2009 ஜூன் 09 திகதிய இலக்கம் டீஎம்ஏ/2009/01 கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் நிறுவனத்தில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) மனித வள முகாமைத்துவம்
(உ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்